
உ

சிவமயம்

# வட்டுக்கோட்டை - மூளாய் வீதி, உடுக்கியவளை மகா கணபதிப்பிள்ளையார்

# ஆலய வரலாறும் பாடல்களும்



வெளியீடு: உடுக்கியவளைத் தேவஸ்தானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வட்டுக்கோட்டை - மூளாய் வீதி உடுக்கியவளை மகா கணபதிப்பிள்ளையார்


# ஆலய வரலாறும் பாடல்களும்

தொகுப்பாளர்
ஆலயத் தொண்டன்
முருகேசு சவுந்தரசண்முகநாதன்

வெளியீடுபவர்
ஆலயத் தொண்டரும் அறங்காவலரும்
**சி. கனகசபாபதி,**
உடுக்கியவளைப்பிள்ளையார் கோயில்,
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள் மண்டபத் தோற்றம்.



மூலஸ்தான மூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வட்டுக்கோட்டை - மூளாய் வீதி உடுக்கியவளை



# மகா கணபதிப்பிள்ளையார்

பாத கமலங்களுக்கு

இம்மலர்

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா கணபதிப்பிள்ளையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் : ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதி முதல்வர்.
ஆதீன முதல்வர் : ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்.
பருத்தித்துறை, வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.
தொலைபேசி :- 021 - 222 2870

10./.04./ 2004

## அருள் ஆசிச்செய்தி

அன்புள்ளவர்கட்கு,

வட்டுக்கோட்டை உடுக்கியவளையில் எழுந்தருளி இருக்கும் விநாயகப் பெருமானிற்கு நடைபெற்ற கும்பாபிஷேகத்தையும் ஆலய வரலாற்றையும் நிதர்சனம் ஆக்கும் பொருட்டு வரலாற்று நூல் ஒன்றை எழுதுவது மகிழ்ச்சியைத் தருகின்றது. "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற வாசகத்திற்கு அமைய பல ஆலயங்களை கொண்டுள்ள வட்டுக்கோட்டைப் பிரதேசத்தில் இயற்கை அழகையும் ஆலய அழகையும் கொண்டு விளங்கும் விநாயகப் பெருமானுடைய ஆலயம் மிகவும் சிறப்புடையதாக அமைகின்றது. இங்கு வழிபாடுகள் யாவும் சிறப்பாக நடைபெறுவதால் ஊர்மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். வரலாறுகள் அழிந்து கொண்டு செல்லும் இக்காலத்தில் ஆலய வரலாற்றை ஆவணப்படுத்துவது நம்மவர் கடமை ஆகும். இந்நூல் வெளிவருவது நமக்கு மட்டுமல்ல நமது நாட்டிற்கே சிறப்பாகும். எல்லாவற்றையும் வேண்டியவர்க்கு வேண்டியவாறு வழங்கும் விநாயகப்பெருமான் இவ் ஆலயத்தில் எழுந்தருளி உள்ளார். இலகுவாக வழிபடக்கூடியவர் விநாயகப்பெருமான். இவரை வழிபடாது எக்காரியமும் தொடங்கினாலும் தடைப்படும் என்பது வரலாறு. ஐந்து கரத்தையும் ஆனை முகத்தையும் கொண்ட விநாயகரை இவ் ஆலயத்தில் எழுந்தருளிச்செய்து மகா கும்பாபிஷேகத்தை செய்த சிவ ஆச்சாரியரையும் ஆலயப் பொதுமக்களையும் வாழ்த்துகின்றோம். அனைவருக்கும் இறைவன் ஆசி கிடைப்பதாக. "என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்மந்த பரமாசாரிய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கணபதி மலரடி அநுதினம் துதிசெய்ய நினைவது உடன் நிறைவுறும் நிஜமே



# வட்டுக்கோட்டை
# உடுக்கியவளை மகாகணபதிப்பிள்ளையார் கோயில்

பதிவு இல: எச்ஏ/5/ஜே/145

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

திகதி. 10.07.2004

## உடுக்கியவளை மகாகணபதிப்பிள்ளையார் ஆலயகுரு அவர்கள் வழங்கிய ஆசியுரை



### விநாயகர் வணக்கம்

*ஆனைமுகனை அனைத்துலகும் காப்பவனைச்*
*சோனை மதம் பொழியும் சுந்தரனை – வானோர்*
*கணம் போற்றும் தெய்வக் கணபதியை – நாளும்*
*வணங்குவோர் எய்துவார் நல்வாழ்வு.*

சகல புவனங்களையும் அருளாட்சிபுரிந்து ஆன்மாக்களுக்கு ஏற்படுகின்ற விக்கினங்கள் அனைத்தையும் நீக்கி பேரருள் புரியும் கருணாமூர்த்தியாகிய உடுக்கியவளை ஸ்ரீ மகா கணபதிப் பெருமானது பாதாரவிந்தங்களில் சிரந்தாழ்த்தி வணங்குகின்றேன். ஜீவப்பிரம்ம ஐக்கியத்தை உணர்த்தும் வடிவம் கணபதியின் வடிவமாகும். கழுத்துவரை மனிதரூபமும் அதற்கு மேலே யானை முகமும் கொண்டிருக்கும் கணபதியின் திருவுருவமானது. மனித வடிவத்தில் ஜீவாத்மாவையும் கஜரூபத்தில் பிரம்மஸ்வ ரூபத்தையும் உணர்த்தி இரண்டும் இணைந்த ஓர் அற்புத நிலையில் காட்சியளிக்கின்றார். எனவே கணபதியின் திவ்விய வடிவம் ஜீவ பிரம்ம ஐக்கியத்தை எமக்கு எடுத்துக்காட்டுகிறது. இதே போன்று வீநாயகப் பெருமானது பெருமையை எடுத்துக் கூறிக்கொண்டிருக்கலாம். முடிவிலாத தத்துவங்களைக் கொண்டவர் விநாயகப்பெருமான் அந்தவகையில் (07.06.2004) திங்கட்கிழமை வைகாசி மாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோண நட்சத்திரமும் கூடிய சுப நன்நாளில் மிக உயரிய முறையிலே பெருஞ்சாந்தி விழா இனிதே நிறைவேறியது. அதை ஒட்டி மலரவிருக்கும் ஆலய வரலாறும் பாடல்களும் என்கின்ற தலைப்பைத் தாங்கிவரும் இம்மலர் அதிசிறப்பு வாய்ந்ததாக அமைய வேண்டி எனது பிரார்த்தனையையும் அருளாசியையும் அன்புடன் தெரிவிக்கின்றேன்.

**வாழ்க சைவம் வளர்க இறைபணி**

**சுபம்**

இங்ஙனம்
பிரம்ம ஶ்ரீ. ச. நடராஜசர்மா
உடுக்கியவளை தேவஸ்தானம்,
வட்டுக்கோட்டை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய பரிபாலன சபை

பதிவிலக்கம் :- எச்ஏ/ ஜேஏ/ எஸ்/120 - 02-12-1988

VADDUKODDAI - THEKKANAPPAI
KANNAKAMBIKA SAMETHA KANNALINGESVARAR ALAYA
PARIPALANA SABAI

Redg No :- HA/JA/S/120 Of 02-12-1988

*Vaddukodai.* வட்டுக்கோட்டை.

.................. 200.....

| | | |
|---|---|---|
| க.விசுவநாதன் | சி.ஸ்ரீ. ஜீவா | திருமதி. சி. சாந்தினி |
| தலைவர் PRESIDENT | செயலாளர் SEORETARY | பொருளாளர் TREASURER |

## ஆசியுரை

ஐயா,

வந்தவினை போகுமே மனக்கவலை மாறுமே
சிந்தனைதனில் ஐந்தெழுத்தும் சேருமே
கந்தனுக்கு மூத்தானை ஆனைமுகத்தானை
மூவுலகும் காத்தானை கைதொழுவார்க்கு.

விநாயகர் வழிபாட்டைச் சைவமயத்தவர்கள் மட்டுமன்றி பல இனத்தவர்களும் பின்பற்றுகின்றார்கள். எமது கிராமத்தில் அடியார்களுக்கு வேண்டியவற்றை ஈர்ந்தருளும் விநாயகப்பெருமான் எழுந்தருளிய உடுக்கியவளைப்பதிக் கோயில், ஆதியில் ஒரு சிறு ஆலயமாகத் திகழ்ந்து, இப்பொழுது அறங்காவலரின் விடாமுயற்சியினாலும் சிவாச்சாரியாரின் உள்ளன்புடன் செய்துவரும் பூஜா வழிபாட்டினாலும் அடியார்களின் கைங்காரியங்களினாலும் இன்று இத்தலத்திலுள்ள ஆலயம் புதுப்பொழிவுடன் விளங்குகின்றது.

சைவ சமயத்தவராகிய நாம் எக்கருமங்களை ஆரம்பிக்கும் முன்பு விநாயகரை வழிபட்டுச் செய்தால் சித்தியடைவது திண்ணம். கிராம மத்தியில் வீற்றிருக்கும் இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகப்பெருமான் கிராமமக்களுக்கு இன்னல்களை தீர்த்து அருள்பாலித்து வருவதை எம்மால் அவதானிக்க முடிகிறது.

அண்மையில் இவ்வாலயத்தின் சிவாச்சாரியரும் அறங்காவலரும் இணைந்து கும்பாபிஷேகத்தை வெகு சிறப்பாக நடாத்தியமை எமது கிராமவாசிகளிற்கு ஒரு பெருமை. இவ்வாலயத்திற்கு பஞ்சமுகப்பிள்ளையார் ஒன்றை அடியார் ஒருவர் அன்பளிப்புச் செய்து இக்கிராமத்தில் பஞ்சமுகப் பிள்ளையார் இல்லாக்குறையை நீக்கிவிட்டார்.

இவ்வாறு மேன்மேலும் மகோற்சவங்கள் நடைபெற்று, ஆகமமுறைப்படி பூஜைகள் நடைபெற, விநாயகப்பெருமானின் திருக்கடாட்சம் எல்லோருக்கும் கிடைக்க அடியேனின் நல்லாசிகள்.

க. விசுவநாதன்
(சமாதான நீதவான்)
தலைவர்
கண்ணாம்பிகா சமேத
கண்ணலிங்கேஸ்வர ஆலயம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவயோகர் சுவாமிகளின் சீடரான அமெரிக்க சுவாமிகளின் அளவெட்டி ஆதீனத்தின் சிரேஷ்ட அங்கத்தவரும், வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் முந்நாள் உப அதிபருமாகிய திரு. குமாரசாமி சிவசுப்பிரமணியம் அவர்கள் வழங்கிய

## அணிந்துரை

"கணபதி வணக்கம் கைமேற்பலன்" என்பர் பெரியோர். வழிபாட்டில் முதல் வணக்கம் விநாயகருக்காகும். இதனாற் கணபதி வழிபாடு எங்கும் உள்ளது. மூசிகவாகனன் எம்மூலாதாரத்திலிருந்து எமக்கருள்கின்றான். குருவின் துணையுடன் ஆத்மீகம், ஆழ்மனத் தொடர்புகளை ஏற்படுத்தின், அவை வலுவடைய தெய்வக்காட்சி கிடைக்கும். இதனால் ஐங்கரனின் தொடர்பு ஏற்பட, அறவாழ்வு மிளிரும். கணேசர் எல்லா உலகங்களுக்கும் தலைவராவர். அவர் சைவத்தின் மூலக் காப்பாளன். அவர் எம்மனதில் ஆன்ம ஒளியைப் பரப்புவார். சைவசமயம் உள்ளத்தை மலரச்செய்து ஆன்ம உணர்வையும், இறை ஞானத்தையும் மனிதரில் தூண்டும். இது எல்லா உயிர்களிலும், அன்பையும், சமரசத்தையும் ஏற்படுத்தும். இதன் கர்த்தா கணநாதனாவர். பக்தர் ஆன்ம ஒளிபெற ஏகதந்தன் உறையும் மூலாதாரத்தில் ஆன்மாவை நிறுத்தி, அவர் பாதாரவிந்தங்களைத் தரிசிப்பர். இதனால் வினைகள் நீக்க பேரின்பம் கிட்டும்.

இதை அடைவதற்கு வழிபாடும், தியானமும், முதற்படியாகும். நாம் எளிதில் வழிபடுவதற்காகப் பிள்ளையார் உடுக்கியவளையில் அருளாட்சி செய்கிறார். அவர் தம் திருவுருவத்தைத் தந்தும், மாங்கனி மூலம் தாம் உறையும் இடத்தைக் காட்டியும் அற்புதம் செய்த திருத்தலம் உடுக்கியவளையாகும். பக்தர் நாராயண உடையார், பனையால் அமைத்த குடியில் இன்று அழகிய பெரும் கற்கோயிலாக மிளிருகின்றது. அத்திமுகத்தோன் அருளும், அடியார்களின் பங்களிப்புமே இதன் காரணமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையாரின் மகிமை, தலச்சிறப்பு, அடியார் பெருமை ஆகியவற்றைக் கூறும் "கோயிற் புராணம்." "பாமாலை", "கோயிற் பதிகம்", "திருவூஞ்சல்", தனிப்பாடல்கள் என்பன இவ்வாலயத்தின் பிரபந்தங்களாகும். இவை பிள்ளையாரின் அருளிற்திளைத்த அடியார்களாற் தந்தவையாகும். இவற்றையும், ஆலய வரலாற்றையும் ஒன்று திரட்டி வெளிவரும் இந்நூல் ஆலயத்தின் சிறந்த ஆவணமாகவும், அடியார்களுக்கு இன்றும், என்றும், இறைவனதும், ஆலயத்தினதும் பெருமையைக் கூறிநிற்கும். இச்சிறந்த பணி ஆலய அறங்காவலரால் முன்னெடுக்கப்படுவது வரவேற்கத்தக்கதாகும்.

பிள்ளையார் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

கு. சிவசுப்பிரமணியம்.

"சிவவாசம்"
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.
5.07.2004.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கணபதி மலரடி அநுதினம் துதிசெய்ய நினைவது உடன் நிறைவுறும் நிஜமே



# வட்டுக்கோட்டை
# உடுக்கியவளை மகாகணபதிப்பிள்ளையார் கோயில்

பதிவு இல: எச்ஏ/5/ஜே/145

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.

திகதி......... 200...

## உடுக்கியவளை விநாயகர் ஆலயத் தொண்டரும் அறங்காவலரும் வழங்கும் நற்செய்தி



அன்பார்ந்த விநாயக அடியார்களே!

உடுக்கியவளை விநாயகர் ஆலயம் மற்றைய ஆலயங்களைப் போல் அன்றி வித்தியாசமான முறையில் அமைந்துள்ளது. அனேக தலங்களில் மக்கள் ஆலயங்களை அமைத்து விக்கிரகங்களை வைத்து வழிபடுகின்றனர். இந்த ஆலயம், விநாயகரே தமது அடியாருடைய பக்தியின் மேலீட்டிலே கட்டுப்பட்டு கைதடி என்ற ஊரில் இருந்து இங்கு வந்து கோயில் கொண்டு அருளினார் என்று ஆலய வரலாறு கூறுகின்றது. அன்று தொட்டு இன்று வரை இந்த ஆலயத்தில் நடைபெறுகின்ற முன்னேற்றச் செயல்கள் எல்லாம் நாம் நினைக்காமலே விநாயகர் திரு அருளால் நடைபெறுகின்றது. எல்லாம் அவன் செயல் அன்றி எம் செயல் ஒன்றும் இல்லை.

"பக்திவலையில் படுவோன் காண்க" என்னும் கூற்றிற்கு அமைய எமது மூதாதையராகிய நாராயண உடையார் என்பவரின் பக்தியில் கட்டுப்பட்டு விநாயகர் தாமாகவே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆலயத்தின் செயற்பாடு என்னவென்றால் ஆலயச் சூழலில் உள்ள மக்களின் நன்மை கருதி சேவை ஆற்றி வருகின்றது. இந்த ஆலயத்தில் பூசை செய்யும் பூசகர் சொந்த நன்மை கருதாது பக்தி அன்பு என்பவற்றை முன் வைத்து நித்திய நைமித்திய பூசைகளைச் செய்து வருகின்றார்.

தொண்டர் தம் பெருமை சொல்லவும் வேண்டுமோ என்ற கூற்றுக்கு அமைய தொண்டர்களுடைய திருத்தொண்டு சிறப்புற்று விளங்கி ஆலயத்தை சிறப்புற வைக்கின்றது. வெளிநாடுகளில் உள்ள விநாயக அடியார்களின் உள்ளங்களிலே விநாயகன் திருவருள் பாலித்து தாமாகவே முன்வந்து உதவிகள் செய்து ஆலயம் சிறப்புற்று விளங்குகின்றது. எல்லா உயிர்களுக்கும் உடுக்கியவளை விநாயகர் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

மேன்மை கொள் உடுக்கியவளை விநாயகன் திருவருள் விளங்குக உலகம் எல்லாம்.

வணக்கம்

சி. கனகசபாபதி
ஆலயத் தொண்டரும், அறங்காவலரும்.

உடுக்கியவளை ஆலயம்,
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# வட்டுக்கோட்டை – முளாய் வீதி உடுக்கியவளை மகாகணபதிப்பிள்ளையார் சரணம்

## கோயில் வரலாறு

சைவமும் தமிழும் சிறந்து விளங்கும் திருத்தலங்கள் மிக்க வட்டுக்கோட்டைக் கிராமத்தில் பக்தி நெறியில் திளைக்கும் அடியார்கள் உளர். இக் கிராமத்தின் நடுவே மூளாய் வீதி எனும் சிறு பகுதி உண்டு.

கி.பி பதினெட்டாம் (18ம்) நூற்றாண்டில் - (1760ல்) முருக உடையார், நாராயண உடையார் ஆகிய சைவ சீலர்கள் வாழ்ந்தனர். நாராயண உடையார் பிள்ளையார் மீது பெரும் பக்தி பூண்டவர் ஆசாரசீலர். வருடம் தோறும் மார்கழி மாத விநாயகர் நோன்பு விரத காலத்தில் கைதடி என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கும் வீரகத்திப் பிள்ளையாரிடம் சென்று வழிபடுவதை வழக்கமாகக் கொண்டவர். இவ் ஆலயம் நம் ஊரிலிருந்து ஏறக்குறைய பதினைந்து மைல் தூரத்திலும், கைதடிச் சந்தியிலிருந்து வடக்கே ஏறக்குறைய ஒரு மைல் தூரத்திலும் இருக்கின்றது. உடையார்கள் குடும்பத்துக்குச் சொந்தமான இக் கோயிலில் இன்றும் அவர்கள் பரம்பரையினரே அறங்காவலர்களாக இருக்கின்றனர். சிறந்த போக்குவரத்து வசதி இல்லாத அக்காலத்தில் அவர் எண்பது வயது முதிர்ச்சியையும் பொருட்படுத்தாது, தள்ளாத வயதிலும் விநாயகரைத் தொழ விரும்பினராய், கால் நடையாக வழக்கம் போல் நடந்து சென்று விநாயகரை வழிபட்டுத் திரும்பினார். திரும்பி வரும் பொழுது சங்கரத்தை என்னும் ஊரிலுள்ள வழுக்கையாற்றுப் பிரதேசத்தைத் தாண்டியுள்ள நவாலி என்னும் ஊர் ஆரம்பிக்கும் இடத்தை வந்தடைந்தார். உடலின் தளர்வினால், களைப்படைந்து அவ்விடத்தில் உள்ள களையோடை கண்ணகா அம்மன் கோயில் வாசலில் வீழ்ந்து விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் எழுந்து அம்மன் கோயிலில் இருந்த பொழுது அவரை அறியாமலே நித்திரையில் ஆழ்ந்து விட்டார். அச்சமயம் அவரின் கனவில் பிள்ளையார் தோன்றி "நீர் இனிமேல் கைதடிக்கு வரவேண்டாம். உமது பாட்டனாரின் பெட்டகத்தில் நான் இருக்கின்றேன். என்னை எடுத்துக் கோயில் அமைத்து அங்கேயே விரதம் நோற்று வணங்கிடுவாய்" என்று அருள் மொழிந்தார். கனவில் இருந்து விழித்த அடியார் பிள்ளையாரின் கட்டளையை நினைந்து நெஞ்சுருகி இறைவன் கட்டளைப்படி வீடு திரும்பினார். ஆண்டவர் சொல்லிய செய்தியை உறவினருக்கு அறிவித்தார். அவர்கள் சூழ, பெட்டகத்தைத் திறந்து பார்த்த பொழுது, அங்கு பட்டுச்சேலையாற் சுற்றப்பட்ட சந்தன மரத்தாலான பிள்ளையாரின் திரு உருவம் காணப்பட்டது. எல்லோரும் பக்திப் பரவசமடைந்து கணேசனைத் தொழுது பரமானந்தமுற்றனர். ஆலயம் அமைத்து ஆனைமுகன் திருவுருவை எழுந்தருளிவித்து வழிபடுவதற்கு ஏற்ற திருத்தலம் ஏதெனத் தெரியாது தவித்த உடையார், இறைவனைப் பணிந்து நின்றார்.

இப்பொழுது கோயில் அமைந்துள்ள உடுக்கியவளையில் அக்காலத்திற் பெரிய மாமரம் ஒன்று இருந்தது. அம் மரத்தடியில் வருடம் தோறும் நாராயண உடையார் இறைவனுக்குப் பொங்கலிட்டு, பூசை செய்து வழிபடுவது வழக்கம். வழக்கம் போல் பொங்கலுடன் கனி, கிழங்குகள் படைப்பதற்குப் பழங்களில் மாம்பழங்கள் ஓரிடமும் கிடைக்கவில்லை. படையல் படைத்துப் பூசையின் பொழுது மாம்பழம் இல்லையேயென மிக மனம் வருந்தி நாராயண உடையார் இறைவனைத் தியானித்தார்.

அப்பொழுது பிஞ்சோ, காயோ, கனியோ இல்லாத அந்த மரத்திலிருந்து அழகிய நறுஞ்சுவைமிக்க மாங்கனி வீழுந்தது. இவ்வதிசயக் காட்சியைக் கண்ட உடையாரும், அடியார்களும் இறைவன் திருவருளை நினைந்து வியந்து பக்திப் பரவசத்துடன் வழிபட்டனர். ஆண்டவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்குறிப்பினால் உணர்த்திய உடுக்கியவளையே கோயில் அமைக்க ஏற்ற திருத்தலம் என்று எல்லோரும் உணர்ந்தனர்.

கி.பி 1840ம் ஆண்டு, நாராயண உடையார் அவ்விடத்தில் பிராமணர்கள். பெரியோர்கள் வழிகாட்டலில் இறைவன் திருவருளில் ஆலயம் அமைத்து மூலவருக்கு "மகா கணபதிப்பிள்ளையார்" என நாமம் சூட்டி வழிபடுவாராயினர். அப்பொழுது அக்கோயில் பனை மரத்தாலும் ஓலையாலும் அமைக்கப்பட்டது. பிள்ளையாருக்கு பூசை செய்ய கறுவல் பூசாரி, சிவலைப்பூசாரி என்று அழைக்கப்படும் நாராயண உடையாரின் சகோதரர்கள், பூசாரிமாராக இருந்து பூசைகளை செய்து வரலாயினர். 1934ம் ஆண்டளவில் பூசை செய்த திரு.அம்பலவாணர் அவர்களே கடைசிப்பூசாரியாவார். இவரின் பின் பிராமணக் குருக்களே பூசை செய்கிறார்கள்.

பின்னர் 1860ம் ஆண்டில் சிறப்பாகக் கோயில் திருத்திக் கட்டப்பட்டது. இக்காலத்தில் நாராயண உடையாரின் பேரன் மார்க்கண்டு அவர்கள் கோயிற் பரிபாலகராகக் கடமையாற்றினார். அதனைத் தொடர்ந்து 1934ம் ஆண்டு கோயில் வைரக்கற்களாற் திருத்தி அமைக்கப்பட்டது. இவ் ஆண்டுக்கு முன் தொடக்கம் பரமானந்தபிள்ளை சிவப்பிரகாசம்பிள்ளை அவர்கள் அறங்காவலராகப் பொறுப்பேற்றுத் தன் வாழ்நாள் முழுதும் கோயிற் தொண்டில் ஈடுபட்டார். 1938ம் ஆண்டு வசந்த மண்டபம், வைரவர் கோயில், மணிக்கூட்டுக் கோபுரம், மடப்பள்ளி ஆகியன ஸ்தாபிக்கப்பட்டன. எழுந்தருளி விநாயகர், வைரவ மூர்த்தி ஆகியோர் பிரதிஷ்டை செய்யப்பட்டனர். வைரவ மூர்த்தி பிரகாரம் ஆலயத்துள் மட்டுமல்லாது, ஆலயத்து வளவுள்ளும் சிறு தனிக் கோயிலாக இன்றும் உள்ளது. 1962ம் ஆண்டு கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு, மூலஸ்தானம் திருத்தி மீளமைக்கப்பட்டு, கலசம் ஸ்தாபிக்கப்பட்டது. முன் மூலவராக இருந்த லிங்கரூப மகா கணபதிப்பிள்ளையார் மூலாதாரத்தில் (பலிபீடத்துக்கு முன்னால்) ஆரோகனித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்தருளியுள்ளார். மூலஸ்தானத்தில் ஞானமூர்த்தியாக மகாகணபதிப்பிள்ளையார் எழுந்தருளி அருள் பாலிக்கின்றார். ஏறக்குறைய 1969ம் ஆண்டு தொடக்கம் ஆலயத்தின் முதற் பூசாரிகளில் ஒருவரான சிவலைப் பூசாரியின் வழித்தோன்றலான சிவகுருநாதன் கனகசபாபதி அவர்கள் அறங்காவலராகப் பொறுப்பேற்று இன்று வரை ஆலயத்தின் வளர்ச்சிக்குத் தன்னையே அர்ப்பணித்துள்ளார். 1980ம் ஆண்டு மீண்டும் புனருத்தாரனம் நடைபெற்றது. தெற்கு வாசல் மண்டபம், முன் வாசலில் ஒரு பொது மண்டபம், ஆகியன கட்டப்பட்டும் கோயிலில் பல திருப்பணிகள் நடைபெற்றன. புதிதாக வைரவரின் திருச்சொரூபம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இப்புனருத்தாரனம் 1992ம் ஆண்டு முடிவுறப் பங்குனித்திங்கள் 7ம் நாள் (20.03.1992) வெள்ளிக்கிழமை மகா கும்பாபிஷேகம் பிள்ளையார் திருவருளால் இனிது நிறைவேறியுள்ளது. மகா கும்பாபிஷேகப் பிரதம குருக்கள் பிரமஸ்ரீ. ச.ப சண்முகசுந்தர சிவாச்சாரியார் அவர்கள்.

ஆலயங்களில் பன்னிரெண்டு வருடங்களுக்கு ஒருமுறை புனருத்தாரனமும் கும்பாபிஷேகமும் நடைபெறும் வழக்கத்திற்கமைவாகவும், அத்தியாவசியத் திருப்பணிகள் செய்யவேண்டி இருந்தமையாலும் நிகழும் பங்குனி மாதம் 7ஆம் நாள் 21.03.2004, வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி முதல் 9.30 மணிவரையிலமைந்த சுபமுகூர்த்தத்தில் பாலஸ்தாபனம் நடைபெற்றது.

ஆலயப் புனர்நிர்மானத்தின் பொழுது, முன்வாசல் மண்டபம் நீட்டப்பட்டு, வில்வளைவுடைய அமைப்பிற்கு மாற்றப்பட்டது. தூபி, மண்டபங்கள் பழுதுபார்க்கப்பட்டு வர்ணங்கள் தீட்டப்பட்டுள்ளன. தென்திசையிலிருந்த களஞ்சியசாலை, மடப்பள்ளி, ஏனைய அறைகளும் தூர்ந்துபோனமையால் அவை புதிதாகத் திருத்திக் கட்டப்பட்டன. வசந்தமண்டபப் பூசையினை அடியார்கள் வெளியிலிருந்தும் பார்த்து வழிபடத்தக்கதாகத் தெற்குப்பக்கச் சுவரிற் சாரளம் அமைக்கப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தின் ஸ்நபன மண்டபத்தில் ஏற்கனவே வடபாகத்தில் அமைக்கப்பட்ட சிவலிங்கப் பெருமானின் மண்டபம் தற்பொழுது தென்பக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. சிவலிங்கப் பெருமானுடன் சக்தி அம்மையைப் பிரதிஷ்டை செய்வதற்காக வடபாகத்திற் புதிய மண்டபம் கட்டுப்பட்டுள்ளது.

ஆலயத்தின் முன் வில்வளைவு மண்டப முகப்பின் நடுவில் விநாயகரும், தென்புறம் சிவனும், வடபுறம் சக்தியும், முறையே அவர்களுக்குரிய எலி, எருது, சிங்க வாகனங்களுடனும், முன் மண்டப நான்கு தூண்களிலும் சிறிய உருவிற் பிள்ளையாரும், ஸ்நபன ஸ்தானத்தின் முகப்பில் விக்கினேஸ்வரரும், மகா மண்டபவாசலில் கணபதி எலி வாகனம் பக்கத்திலிருக்கப் பூசகர் பூசை செய்யும் காட்சியும், தெற்கு வாசலில் பஞ்சமுகப் பிள்ளையாரும் தென்புற வாசலில் (தெற்கு வெளி வீதியில்) நர்த்தன கணபதியுமாகிய திருவுருவங்கள் அழகுற அமைக்கப்பட்டிருக்கின்றன.

இதுவரைகாலமும் ஆலயத்துக்கு உள்வீதி மாத்திரமே இருந்தது. இம்முறை, ஆலயத்தின் மேற்குத் திசையிலிருக்கும் நிலங்களின் உரிமையாளர்களிடம் அநுமதிபெற்று அந்நிலங்களின் ஒரு பகுதி ஆலயத்தின் வெளிவீதியாகப் பாவனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனால் ஆலயத்தின் கிழக்கு, தெற்கு, வடக்கு நிலங்களுடன் மேற்கு நிலமும் சேர்க்கப்பட்டு, ஆலயத்துக்கென வெளிவீதி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் ஆலய மகா கும்பாபிஷேகத்தின் பொழுதே முதன் முதலாக இவ்வெளி வீதி பாவனைக்கு வந்துள்ளது.

புதிதாகப் பஞ்சமுக விநாயகர் திருவுருவம், பிரதிஷ்டை செய்வதற்காக ஆலயத்திற்கு 23.04.2004 ஆம் ஆண்டு வெள்ளிக்கிழமை, சதுர்த்தி தினமன்று கொண்டுவரப்பட்டது. அத்துடன் புதிதாக அம்மன் திருவுருவமும் 16.05.2004ஆம் ஆண்டு ஞாயிற்றுக்கிழமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டை செய்வதற்காகக் கோயிலுக்குக் கொண்டு வரப்பட்டது. இத்திருவுருவம், ஸ்நபன மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

பஞ்சமுக ஆனைமுகன் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்படமுன் 4.06.2004, வெள்ளிக்கிழமை அடியார்களின் பஜனையுடன் கிராமத்தைச் சுற்றியுள்ள வீதிகளில் திருவுலா பவனி நடைபெற்றது. இறைவன் மகா கும்பாபிஷேகத்தின் பொழுது மகா மண்டபத்திற் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். மகா கும்பாபிஷேக ஆரம்ப நிகழ்வான யந்திரபூசை 07.06.2004ஆம் ஆண்டு திங்கட்கிழமை காலை 7.00 மணியளவில் ஆரம்பமாயிற்று. மகா கும்பாபிஷேகம் தாரண வருடம் வைகாசி மாதம் 25ம் நாள் (07.06.2004) திங்கட்கிழமை முற்பகல் 10.46 மணி முதல் 11.40 மணிவரையிலான திருவோண நட்சத்திர சுபவேளையில் பிள்ளையாரின் திருவருளால் இனிது நிகழ்ந்துள்ளது.

கும்பாபிஷேகப் பிரதமகுரு
பிரமஸ்ரீ. வீ. இராமமூர்த்திக்குருக்கள்
ஆலய குரு :- பிரமஸ்ரீ.ச. நடராசசர்மா

கோயிலின் பிரதானமான திருவிழா மார்கழிப்பிள்ளையார் நோன்பாகும். இவ் விழாவைப் "பிள்ளையார் கதை" என அடியார்கள் கூறுவர். இவ் விழா (பிள்ளையார் நோன்பு) கார்த்திகை மாதம் தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாதம் வளர்பிறை சஷ்டித் திதி வரையுமுள்ள இருபத்தொரு (21) நாட்கள் நடைபெற்று அடுத்த நாள் தீர்த்தோற்சவத்துடன் இனிது நிறைவுறும். இருபத்தொரு இழையங்கலாலான நூலைக் காப்பாக அணிந்து அடியார்கள் மார்கழி நோன்பை அனுஷ்டிப்பர். அக்காலத்தில் தினமும் பிள்ளையார் அகவலும், 1998ம் ஆண்டு தொடக்கம் உடுக்கியவளைப் புராணமும், பிள்ளையாரின் பெருங்கதையும், முதல் நாளும், இருபத்தொராம் நாளும் (கடைசி நாளும்) ஓதப்படுகின்றன. தீர்த்தத் திருவிழாவில் முன்பு அயலிலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெக்கணப்பாய்ப் பகுதியிலுள்ள மிகப்பழம் பெரும் (13ம் நூற்றாண்டு) கண்ணகி மாதா ஆலயத்தின் (கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் கோயில்) பித்தர் திருக்குளத்திலும், அக்குளம் தூர்ந்து போன பின்னர் அருகிலுள்ள அடைக்கலம் தோட்டக் கந்தசுவாமி கோயிற் திருக்குளத்திலும் இன்று வரை நீராடி அடியார்களுக்குப் பிள்ளையார் அருள்பாலிக்கின்றார்.

இதனுடன் மாதாந்த வளர்பிறை சதுர்த்தி விழாக்கள் நடைபெறுகின்றன. ஆவணிமாதச் சுக்கில பட்சம் சதுர்த்தி மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்படுகின்றது. மணவாழக்கோலத் திருவிழா சங்காபிஷேகமாக அமைகின்றது. வாரத்தில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் விஷேச பூசைகள் இடம்பெறுகின்றன.

ஆலயத்தின் பஜனை மன்றம் 1984ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இம்மன்றத்தினர் பஜனைகள் செய்வதோடு நின்றுவிடாது சமயவகுப்புக்கள், சமய அறிவுப் போட்டிகள் நடத்திப் பரிசுகள் அளித்துச் சமய அறிவை மாணவர்களுக்கு ஊட்டுகின்றார்கள். அத்துடன் சமயப் பிரசங்கங்கள், பகவத் கீதை விளக்க உரைகள் நிகழ்த்தியும், இவைபோன்ற சமய அறிவை விருத்தி செய்யும் பல பணிகளில் இவர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள்.

இக்கோயிலுக்கு "உடுக்கியவளைப் புராணம்", "திருவூஞ்சல்", "கோயிற் பதிகம்", "உடுக்கியவளைப் பாமாலை" ஆகியன பிரபந்தங்களாயிருக்கின்றன. அத்துடன் தனிப்பாடல்களும் உள்ளன.

ஆலயத்தின் "திருவூஞ்சல் பதிகம்", மற்றும் அதன் தொடராகிய எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம் ஆகியன இவ்வூரில் வாழ்ந்த சிவஸ்ரீ.நா. சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் அவர்களாற் பாடப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உடுக்கியவளைப் புராணம்", "கோயிற் பதிகம்", "உடுக்கியவளைப் பாமாலை", தனிப்பாடல்கள் என்பன இவ்வூரவரான அடியவர் முருகேசு சவுந்தரசண்முகநாதன் அவர்களாற் பாடப்பட்டவையாகும். "உடுக்கியவளைப் புராணம்" வெள்ளிக்கிழமைகளில் பஜனையின் போதும், மார்கழி விநாயகர் நோன்பின் படிப்பின் பொழுதும் ஓதப்பட்டு வருகின்றது. "கோயிற் பதிகம்" பூசையின் பொழுது பஞ்சபுராணம் ஓதியபின் பாடப்படுகின்றது. "உடுக்கியவளைப்புராணம்", "உடுக்கியவளைப் பாமாலை" என்பன நூலுருவில் வெளிவந்துள்ளன.

மூளாய் என்னும் இடத்தைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை என்பவரும் பிள்ளையார் மீது தனிப்பாடலொன்றைப் பாடியுள்ளார். இவையனைத்தும் பிள்ளையாரினதும், ஆலயத்தினதும், அடியார்களினதும் மேன்மையைக் கூறுகின்றன.

இவ் ஆலயம் இந்துக்கலாச்சார அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இப்பதிவு இலக்கம் எச்ஏ/5/ஜே/145 ஆகும்.

ஆலயத் திருப்பணிக்கும், பரிபாலனத்துக்கும், வெளிநாட்டிலுள்ள விநாயகர் அடியார்கள், தங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்து வருகின்றார்கள். கனடா நாட்டில் வாழும் நம்மூர் அடியார்கள் "மூளாய் வீதி ஒன்றியம்" என்னும் அமைப்பை உருவாக்கி ஆலயத்திற்கு வேண்டிய தொண்டுகளைச் செய்து வருகின்றார்கள். அன்று தொட்டு இன்றுவரை அடியார்கள் பிள்ளையாரிடம் பெரும் பக்தி பூண்டு, கோயிற் திருப்பணிகளின் பொழுது தங்களால் இயன்ற காணிக்கைகளையும், உதவி ஒத்துழைப்புக்களை வழங்கியும், ஆலய வளர்ச்சிக்குத் தங்களை அர்ப்பணித்தும் பல்வேறு வழிகளிற் தொண்டாற்றியும் வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுக்கியவளை ஆலயம் வட்டுக்கோட்டையிலுள்ள மாவடிச்சந்தியில் மேற்கு திசையில் பிரிந்து செல்லும் மூளாய் வீதியில் ½ கி.மீ தூரத்தில் வீதியிலிருந்து நூறு (100) மீற்றர் தூரத்தில் உட்புறம் அமைந்துள்ளது. இக்கோயிலின் அருகில் வடக்குத் திசையில் தெக்கணப்பாய்ப் பதியில் 13ம் நூற்றாண்டைச் சார்ந்த கண்ணகி (மாதா) கோயிலும் (தற்பொழுது கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் கோயில்), மங்களாம்பிகா சமேத மகாலிங்கேஸ்வரர் கோயிலும், கிழக்குத் திசையில் அடைக்கலம் தோட்டப்பதியிற் கந்தசுவாமி கோயிலும், தென் திசையில் மகாகாளி அம்பாள் கோயிலும் சற்று தூரத்தில தென் கிழக்குத்திசையில் பங்குருவைரவர், பிட்டியம்பதி பத்திரகாளி சமேத வீரபத்திரர் கோயிலும் (பத்திரகாளி கோயில்) உள்ளன. இத்தகைய தெய்வீகச் சூழலில் உடுக்கியவளைப் பதியில் ஓங்காரரூபனாக, அன்பு மயமாக "மகா கணபதிப்பிள்ளையார்" எழுந்தருளி, அடியார்களை ஈர்த்து, வினைகளின் வித்துக்களை நீக்கி, ஞான ஒளியைக் கொடுத்து அருள் பாலிக்கின்றார்.

"பிள்ளையார் திருப்பாதம் போற்றி"






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலிங்கரூப
மகா கணபதிப்பிள்ளையார்.



மகா கணபதிப்பிள்ளையார்
மூலஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனதடி வழிபடும் அடியவர் இடர் நீக்கும் கணபதி

மு.க. மாசிலாமணி

இந்துக்களின் வழிபாட்டு மரபில் கணபதி வழிபாடு மிக முக்கிய இடத்தினைப் பெற்றிருக்கின்றது. உயிரெழுத்துக்களில் ஐந்தாம் எழுத்தாகிய 'உ' காரத்தைப் பிள்ளையார் சுழியாக எழுதி இடர் - தடை என்பன ஏற்படாமல் காக்கும்படி வேண்டுவதும், எக்கருமத்தினை ஆரம்பிக்கும் போதும் கணபதியை வணங்கியே ஆரம்பிப்பதும் இந்துக்களின் வழிபாட்டு வழமையாகும். அவ்வாறு கணபதியை வணங்கி ஆரம்பிக்கும் கருமங்கள் வெற்றியாகவும், சிறப்பாகவும் சித்திக்கு மென்பதில் இந்துக்களுக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. இந்துக்களின் எந்த வைபவத்திலும் மிக எளிமையான பொருட்களான மஞ்சள்மா, அறுகம்புல் ஆகியவற்றில் விநாயகர் ஆவாஹானமாகி அங்கு காட்சியளிப்பதனைக் காணலாம். கோயிற் கட்டிட அமைப்பு முறையிலும் பூசை வழிபாட்டு மரபிலும் விநாயகருக்கே முதன்மையும் முக்கியத்துவமும் இருப்பது சிந்திக்கத்தக்கது. கணபதியை மூல மூர்த்தியாகக் கொண்டிராத சிவன், உமை, முருகன், விஷ்ணு போன்ற தெய்வங்களை மூல மூர்த்தியாகக் கொண்ட கோவில்களிலும் தென்மேற்கு மூலையில் கணபதிக்குத் தனிக்கோவில்கள் அமைந்திருப்பதும் முதலில் கணபதிக்குப் பூசை உபசாரங்கள் நடந்தே மூலமூர்த்தி உட்பட ஏனைய மூர்த்திகளுக்குப் பூசை உபசாரங்கள் நடைபெறுவதும் வழக்கம். இவையெல்லாம் கணபதி வழிபாடு. இந்துக்களுடைய வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து பிரிக்க முடியாத ஒன்றாக முக்கியத்துவம் பெற்று விட்டதென்பதனையே தெட்டத்தெளிவாக விளக்கி நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகர் என்றால் தனக்கு மேல் தலைவன் இல்லாதவன் என்பது பொருள். மேலும் தன்னை அன்போடு வழிபடும் அடியவர்களின் விக்கினங்களை நீக்குபவராகையால் "விக்கினேஸ்வரர்" என்ற பெயரும், கணங்களுக்குத் தலைவராகையால் "கணநாதன்" என்ற பெயரும், அடியவர்களைப் பீடிக்கும் கொடிய மாயையைத் துண்டிப்பவராகையால் "வக்கிரதுண்டர்" என்ற பெயரும், பிரபஞ்சம் முழுவதையும் தம்முள் அடக்கிக் கொள்பவராகையால் 'லம்போதரர்' என்ற பெயரும் கணபதிக்குண்டு.

கணபதியின் யானை முகம் அறிவையும் ஆற்றலையும் துதிக்கை எல்லா மந்திரங்களுக்கும் மூலமாக விளங்கும் 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தின் ஒலிக்குரிய வடிவத்தையும், பேழை வயிறு உலகம் முழுவதையும் தன்னுளடக்கிக் கருணையுடன் காக்குந் தன்மையையும் குறிக்கும். விநாயகரின் பாசம் ஏந்திய கை படைத்தலையும், ஒற்றைக் கொம்பு ஏந்திய கை காத்தலையும், அங்குசம் ஏந்திய கை அழித்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் வைத்துள்ள கை அருளுதலையும் குறித்துப் பிரம்மா, விஸ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவம் ஆகிய மூர்த்தங்களும் கணபதியே என்றும் தமிழ் 'ஓ' ங்காரமே கணபதியின் பிரணவ வடிவ மென்றும் நாத வடிவில் இறைவன் நமக்குக் காட்சி தருவதற்கே பிரணவமாகிய 'ஓ' என்ற எழுத்தைப் போன்று அமைந்துள்ள யானையின் முகத்தைத் திருமுகமாகக் கொண்ட கணபதி வணக்கம் தோன்றியிருக்க வேண்டுமென்றும், கணபதியை வழிபட்டால் எல்லாத் தெய்வங்களையும் வழிபட்டதற்குச் சமனாகுமென்றுங் கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சமுக விநாயகர்

கணபதி மூர்த்தங்கள் பல உண்டெனினும் முப்பத்திரண்டு வடிவங்கள் முக்கியமாகப் பேசப்படுகின்றன. இம் முப்பத்திரண்டு வடிவங்களில் ஏரம்ப கணபதி என்ற பஞ்சமுக விநாயகரின் உருவமும் ஒன்றாகும். இந்தியாவிலும் ஈழத்திலும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் பஞ்சமுக விநாயகரின் வழிபாடு மிகச்சிறப்பாகவும் பக்தி பூர்வமாகவும் இடம் பெற்று வருகின்றது. ஐம்பொன்னாலான விக்கிரகங்கள் ஈழத்தின் பல ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. வட்டுக்கோட்டை உடுக்கியவளை மகாகணபதிப்பிள்ளையார் கோயிலிலும் பஞ்சமுக விநாயகரின் திருவுருவம் 07.06.2004ம் திகதி மகா கும்பாபிஷேகத் தினத்தன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. திருபுராசுரன் என்ற அரக்கனால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் சிவனிடம் அடைக்கலம் வேண்ட, சிவன் கணபதியைத் தியானிக்க, சிவபெருமானுடைய ஐந்து திருமுகங்களின்றும் பஞ்சமுக விநாயகர் தோன்றித் திருபுராசுரன் வதஞ்செய்யப்பட்டானென விநாயகர் புராணம் பஞ்சமுக விநாயக அவதாரம் பற்றிச் சொல்லப்படுகின்றது.

கணபதியை இந்துக்கள் மட்டுமன்றிச் சமணர்களும், அவர்களிலும் அதிகமாகப் பௌத்தர்களும் வழிபடுகின்றனர். இலங்கை, இந்தியாவில் மட்டுமன்றி நேபாளம், தீபேத்து, பர்மா, யாவா, சுமத்திரா, இந்தோனேசியா, கொரியா, யப்பான் முதலிய இந்து பௌத்தப் பண்பாடு ஆழ வேரூன்றியுள்ள உலகின் பல நாடுகளிலும் கணபதி வழிபடப்படுகின்றார். வைஷ்ணவர்கள் கணபதியைத் தும்பிக்கை ஆழ்வாரெனப் போற்றிப் பக்தி பூர்வமாக வணங்குவர்.

ஆகவே கருணையின் திருவடிவமாகவும், ஞானத்தின் இருப்பிடமாகவும், ஐந்தொழிலுக்கு அதிபதியாகவும் விளங்கும் பஞ்சமுக விநாயகரை பூக்கொண்டு திருமேனித் தும்பிக்கையானை நம்பிக்கையோடு வழிபட்டு அவனருள் பெறுவோமாக.

" வேளமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுந்து வரும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சைவக்கிரியைகளின் ஆற்றல்

"சர்வ சாதக திலகம்"
பிரம்மஸ்ரீ. ந.பிரசாந்தசர்மா
(உடுக்கியவளை ஆலய சர்வ சாதகர்)
வட்டுநகர்

சைவ சமயத்தில் சொல்லப்பெறுகின்ற கிரியைகள் எல்லாவற்றிலும் நினைவாற்றல், சொல்லாற்றல், செயலாற்றல் என்ற மூன்று வகை ஆற்றல்கள் நிரம்பியிருக்கின்றன. மந்திரம், கிரியை, பாவனை என்ற மூன்றிலும் நிறைவு பெறுகின்ற இச் செயல்களில் மந்திரத்தால் சொல்லாற்றலும், கிரியையால் செயலாற்றலும், பாவனையால் நினைவாற்றலும் அமைந்து விடுகின்றன. மந்திரங்கள் கணிக்கப்பெற்று ஒலி வடிவிலும், யந்திரங்களிலே எழுதப்பெற்று வரிவடிவிலும் ஆற்றல்களை வழங்குகின்றன.

சைவக்கிரியைகளில் "நிரீட்சணம்" என்பது ஒன்று. இது முன்னிலையில் உள்ள ஒரு பொருள் தூய்மை அடைதல் பொருட்டுச் செய்யப்பெறுவது. இந்தக் கிரியைகளைச் செய்யும் போது மந்திரம் ஒன்றை ஓதுதலும், ஒரு பொருளைக் கண்ணினாற் பார்த்தலும் அப்பொருள் தூய்மை அடையவேண்டும் என நினைத்தலுமாகிய மூன்றும் ஒருங்கே நிகழும். அங்கனம் மூன்றும் ஒருங்கே நிகழாத போது, இக்கிரியையால் ஏதும் பயனில்லை என்று நம் நூல்கள் கூறுகின்றன.

ஆகவே மந்திரம், கிரியை, பாவனை ஆகிய மூன்றும் பொருந்தச் செய்கின்ற சைவக்கிரியைகள், பேராற்றல் உடையனவாய் பயன் தருகின்றன என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

அறிவுள்ள உயிர் அறிவற்ற சடப்பொருள் போல் அசைவற்றுக் கிடந்த நிலையிலிருந்து மாற்றம் பெற்றுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவலிங்கப் பெருமான்.



சிவசக்தி அம்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயலாற்றும் திறமுடையதாகும்படி வைத்த சிவபெருமானையும், எள்ளளவும் துன்பம் கலவாத பேரின்பம் பெறுவதற்கு வழி கூறும் வேத சிவாகம அருள் நூல்களையும், அவ் அருள் நூல்களின் நல்லின்பம் பெறுவதற்குக் கூறும் நெறிமுறைகளையும் புறக்கணித்து விட்டு மனம் போன போக்கில் வாழ்வது அறிவுடையதாகுமா? எனவே கடவுளை அவர் அருளிய நெறி முறையில் வழிபாடு செய்ய வேண்டுவது மிக மிக இன்றியமையாததுமாகும். கடவுள் வழிபாடு ஒன்றினாலேயே துன்ப நீக்கமும், இன்ப ஆக்கமுமாகிய இரு வகைப்பயன்களும் கிட்டும். ஆதலால் அதையின்றி மக்களுக்கு நற்கதி வழங்குவது வேறொன்றும் இல்லை என்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

மூவகை வழிபாடு

சிவ வழிபாட்டுக்குரிய காரணங்கள் மனம், மொழி, மெய் என்னும் மூன்றும் ஆகும். அது பற்றிய வழிபாடும் சிந்தித்தல், துதித்தல், வந்தித்தல் என மூன்று வகைப்பட்டு நிகழும்.

மனம்

துன்பத்தை விளைவிப்பனவாகிய நல்வினை, தீவினைகள் மனம், பொறி வழியே செல்வதால் உண்டாவன. பிறப்பு, இறப்புக்குக் காரணமாகிய வினைகள் கூடாமல் இருப்பதற்கு மனதை அருட் குறியின் பால் நிறுத்தி வேறு நினைவுகளை ஒழித்து இடையின்றிச் சிவபெருமானையே சிந்தித்திருத்தல் வேண்டும். அத்தகைய சிந்தனை கைகூடுவதென்பது எளிமையானது அல்ல. பல்காலும் பயிலும் பயிற்சி முதிர்ச்சியினாலேயே அந்தப் பெரும் பேறு சித்திக்கும். ஆதலால் வாழ்நாளை வீழ்நாளாக்காது தியான பாவனையை ஒவ்வொருவரும் மேற்கொள்ளவேண்டும்.

மொழி

மொழி வாய்மை பேசுதலுக்கும், அறம் உரைத்தலுக்கும், இனியதைக் கூறுதலுக்கும் பயன்படுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் பொய்மை பேசுதலுக்கும், தீமை கூறுதலுக்கும், இன்னாதவை மொழிதலுக்கும் கூடப் பயன்படமுடியும். முன்னர் கூறிய மூன்று வகை மொழிகளும் நன்மை தருவனவே. ஆயினும் அவைகளுக்குப் பின்னர் கூறிய மூன்று வகை மொழிகளைப் போல் தீவினைகளாக ஆகாது. நல்வினைகளாக ஆகி பிறப்பு, இறப்புக்களைத் தருவனவேயாகும். நல்வினை பொன்விளங்கும். தீவினை இருப்பு விளங்கும் போல் பிறப்புக்கு வித்தாவதைப் பரிமேலழகர் குறிப்புடன் "இருள் சேர் இருவினை" என்ற திருவள்ளுவர் திருவாக்கைப் படித்து தெரிந்து கொள்ளுதல் வேண்டும். பிறப்புக்கள் நீங்கிப் பேரின்பம் பெறுவதற்கு அருள் நூல்களை ஓதும் ஆசாரியர் உணர்த்திய முறையில் ஐந்து எழுத்து முதலிய மந்திரங்களை தியானிக்க வேண்டும்.

மெய்

உயிர்களின் பொருட்டுச் செய்கின்ற உதவிகளும், மகப்பேறு, செல்வப்பேறு முதலாக தனக்கு வேண்டிய பேறுகளின் பொருட்டுச் செய்கின்ற வழிபாடுகளும் நல்லனவே. ஆயினும் அவற்றால் பிறப்புக்கள் மேன் மேலும் உண்டாவதேயன்றி ஒழியுமாறு இல்லை. இச் செயல்களுக்கு மாறுபட்டனவாகிய தீச்செயல்கள் பிறப்புக்களை உண்டாக்குவன என்பது சொல்லாமலே விளங்கும் திருநந்தவனம், திருக்குளம், திருக்கோயில் ஆகிய திருப்பணிகளைச் செய்தலும் சிவாலய தொண்டு, சிவபூசையாகியன புரிதலுமே உயிர்களை உய்விக்க வழி செய்வனவாகும்.

உயிர்கள் வினைவயப்பட்டு உலகியலில் அழுந்தி மனைவி, மக்கள், செல்வம் முதலியவற்றில் மோகம் கொண்டு இன்ப, துன்பங்களை இடையீறின்றி நுகர்ந்து கொண்டிருக்கின்றன. எங்கும் நிறைந்திருக்கின்ற கடவுளை, எந்த இடத்திலும் இருந்து கொண்டு வழிபடலாம் என்றால் கோயில் தவிர்ந்த மற்ற எல்லா இடங்களும் இன்ப, துன்பங்களுக்கு நிலைக்களங்களாகவே இருத்ததாதலின் வழிபாடு தடைப்படுவது உறுதி. அதனால் வரம்புக்குட்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எழுந்தருளி விநாயகர்.



வைரவமூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகியலை மறந்து கடவுளை வழிபடுவதற்கு ஒரு பொது இடம் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். எல்லா நாட்டினரும், எல்லா சமயத்தினரும், எல்லா வகுப்பினரும் தத்தம் பொது வழிபாட்டிற்கு என இடங்களை அமைத்துக் கொண்டிருப்பது எங்கும் காணப்பெறுவதாகும். அங்ஙனம் அமைந்த இடங்களே வணக்கத்தலங்களாகும். கடவுள் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பாராயினும், திருக்கோயில்களில் மந்திரபூர்வமாக பிரதிட்டை செய்யப்பெற்ற திரு உருவங்களில் அவர் வெளிப்பட்டுத் தோன்றி அருள் புரிகின்றார். ஆதலால் ஆலய வழிபாடு அனைவருக்கும் வேண்டப்படுவதேயாகும்.

மங்களம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வட்டுக்கோட்டை - மூளாய் வீதி
# உடுக்கியவளை
# மகா கணபதிப்பிள்ளையார் மீது

முருகேசு சவுந்தரசண்முகநாதன் அவர்கள்
பாடிய

அ) "உடுக்கியவளைப் புராணம்"

ஆ) "உடுக்கியவளைப் பாமாலை"

இ) "தனிப்பாடல்கள்"

## அ) "உடுக்கியவளைப் புராணம்"

### காப்பு

01. ஓங்கும் அறம் தழைக்கும் உயர் வட்டுக்கோட்டைதனில்
தீங்கும் அற்ற அடியார்சூழ், திகழும் உடுக்கியவளைப்
-பதியின்
வீங்கும் புராணமதை விருப்புடன் செந்தமிழிற் பாடிடவே
ஈங்கும் எடுத்தடி தருவாய் ஈந்திடும் அருள் மகாகணபதிப்
- பிள்ளையாரே

### பொது

02. அம்மையின் கோயிலருகே அடியார் கனவினிலே
தம்மையே ஒலி காட்டித் தானிருக்கும் இடமும் காட்டி
செம்மையாய்க் கோயில் கொள்ளச் செம்மாவடியும் காட்டி
இம்மையோர் தொழ அருள் உடுக்கியவளைக்
- கணபதியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. சீலம் கொண்ட அடியார், சிவ நாராயண உடையார்
ஆலம் உண்ட அழகன் அருள் வீரகத்திப் பிள்ளையார்
- தனைக்
கோலம் கண்டு தொழவே கோயில் கைதடி செல்வார்
காலம் நீண்டு சென்றும் கடுகி வழி நடந்தார்.

04. நடந்தவர் களைப்பினால் நவாலிக் களையோடை
- கண்ணகா அம்மன் கோயிலினில்
கிடந்தனர் ஆழ்துயிலில் கிழப்பருவ நாட்களிலே
படர்ந்தருள் ஆனைமுகன் பண்ஒலி காட்டி நின்றே
இடர்களையும் தம்உருஉள இடத்தை இனிதாகக்
- கூறினாரே.

05. "உம் உடலை வருத்தி ஊர் கைதடி ஏகவேண்டா
எம் உருவை எடுத்து எழிலாலயம் அமைத்தங்கே
தம் விரதம் நோற்றுத் தாழ்பணிவீர்" என்றாணையிட்டார்
- ஐங்கரனும்
நம் அடியார் கனவினிலே நற்கண்ணகா அம்மன்
- கோயிலினிலே

06. கனவினிலே விழித்த அடியார், களிமிகக் கொண்டு
மனதினிலே தியானித்து, உணர்ந்து மகா கணபதியைத்
- தொழுது, உருகி
தனத்திலே உயர் பக்தியுடன் தன் இடம் விரைந்து ஏகி
இனத்திலே அயலவர்க்கு, இறைமொழியைக் கூறி
- மகிழ்ந்தார்.

07. பந்து அயலார் மனையிற் சூழப், பழம் பெட்டகத்தை
-அடியார் திறப்ப
சந்தன மரத்திலாங்கே, சம்பூரணணாய்ப், பட்டாடை
- சாத்திய நிலையில்
தந்தமுகன் உருதனைக் கண்டு, தம் உளம் சிலிர்த்து,
-உருகிடவே
முந்தய நற்ப்பயனால், மற்றோர் முற்றுமுள பக்தியினிற்
- கலந்தனரே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. கண்டனர் களித்தனர் கணநாதன் காட்சியிற்
- திளைத்தனர்
கொண்டனர் பக்தி ஒங்க குளித்தனர் கருணைக்
- கடலில்
உண்டனர் உயர் அடியாராய், உகந்தனர் உமைபாலன்
- தாசனாய்
விண்டனர் வினைநீங்கினர் விளக்கிடமுடியுமா விநாயகன்
-அருள் தனையே

09. தந்தமுகப் பெருமானைத் தம்மிடத்திற் கோயில் கொள்ள
சிந்தை மிக விருப்பினாற் சிவ தலத்தைத் தேடினார்
முந்தை நல்லடியாரின் முயற்சிதனைப் பலித்திடவே
எந்தையாழ் ஈசனும் இன்இடம் காட்டி நின்றார்.

10. துங்கக்கை ஈசன், தனக்குத், தூய அடியார் கூட்டம்
பொங்கல்தனைப் படைத்துப் பூசைதனைச் செய்து
- துதிக்கும்
திங்களும் வந்தகாலை, திகழும் மகிழ்ச்சியோடு,
- உடையார்
தங்கள் தொண்டினைச் செய்யத் தம்மவருடன்
-முனைந்து நின்றார்.

11. ஆவின் சாணத்தால் மெழுகி, அழகிய மாக்கோலமிட்டு,
மாவின் இலையாற் தோரணங் கட்டி, மங்கலக் கும்பம்
-வைத்து
திகழும் ஒளி விளக்கேற்றி, திருவருட் பிள்ளையார்
-பிடித்தே,
புகழும் மறை இறைதொழுது, பொங்கல்தனை அடியார்
-சமைத்தனரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பருப்பொடு கொழுக்கட்டையும், பாணி எள்ளுடன்
- பணியாரமும்,
விருப்பொடு பலகாரங்களும், விளைந்திடும் அவலுடன்,
- பால் தயிர் தேனும்
கரும்புடன் இளநீரும், கனிந்த கனிகளுடன் சர்க்கரை
- சேர்த்த பொங்கலிட்டு
அரும்புடன் மலரும் அறுகம்புல்லும் சாத்தி, ஆராதித்தனர்
- மாவடியில் இறைதனையே.

13. ஆங்கவர் கணபதிக்கு அறுசுவை பொங்கல்
- படைத்திடவே
மாங்கனி இல்லையே என மனம் வருந்தித் துதித்திடவே
ஈங்கவர் மாமரத்தினின்று இனிய பழம் கொடுத்திடவே
தீங்கனி பெற்ற அடியார் திருத்தலம் ஈதெனக்
- குறித்திட்டாரே.

14. கற்பகதரு பனையில் கருத்துடன் நிறைந்த கோயிலில்
அற்புதப் பிள்ளையார்தனை அன்புடன் அமர்வித்த
- உடையார்
பொற்பாதம் பூசைதனைப், புனித கறுவல் சிவலைப்
- பூசாரிமார் செய்திட
நற்பெரும் பணிசெய்தார், நல் ஆயிரத்தி எண்ணூற்று
- நாற்பதாண்டிலேயே

15. பக்திமிகு நாரயண உடையார் பணிவுடனே பார்போற்றும்
சக்திமிகு கணபதிக்கு உடுக்கியவளையிற் கோயில்
- அமைத்தார்
சித்திமிகு அருள்சுரந்து தம் அடியார் நலம்பெறவே
எத்திமிகு திசையெல்லாம் ஏற்றமிகு வாழ்வு அருள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. தலப் பெருமை

உடுக்கின் நடுச்சிறுபாகம் உயர்ந்திருபுறம் விரிவது போல்,
ஒடுங்கிய சிவதலத்தின் சக்தி ஓங்கி நின்று,
-பரவுவதனாலே
அடுக்கிய வினை நீக்கி, அடியார் பேரின்பத்திற் திளைத்து
- நிற்கக்
கொடுத்திடும் அருளுடை மகாகணபதியுறை
- உடுக்கியவளைப் பதிஈதே.

17. துதி

ஓம் என்னும் பிரணவத்தின் ஒலியான நாதனே
ஓம் என்னும் பிரணவத்தின் ஒளியான ரூபனே
ஓம் என்னும் பிரணவத்தை ஒரு மனதாய்க் கூறியே
ஓம் என்னும் பிரணவத்தில் ஒன்றாய்க் கலந்திடுவோம்.

18. நூற்பயன்

உடுக்கியவளைப் புராணமதை உணர்ந்து,
- ஓதியோருக்கும்
அடுத்திருந்து கேட்டு இன்புற்று, அகத்தினிற்
- பதித்தோருக்கும்
இடுக்கிய வினை அகலும், இறை அருள் நிறைந்து
- நிற்கும்,
விடுத்திடும் மாய வாழ்வு, விளங்கிடும் பேரானந்தப் பேறே.

"ஓம் விநாயகா சரணம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஞ்சமுக விநாயகர்.



மூசிக வாகன மூர்த்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வட்டுக்கோட்டை - மூளாய் வீதி
# உடுக்கியவளை
# மகா கணபதிப்பிள்ளையார்

## ஆ) "உடுக்கியவளைப் பாமாலை"

### காப்பு

ஓங்காரரூபனாம் உடுக்கியவளை விநாயகன்
ஆங்காரம் போக்கி அருள்விக்கும் நாயகன்
பாங்காக வட்டுநகர்ப் பதியினில் உறைந்தே
தாங்காத வினைபோக்கும் இறைவன்தாள் சரணம்.

### பாமாலை

01. விளங்கும் சிவநெறி நிலைபெற வேண்டித்
துளங்கும் சதுர்த்திப் பிறையினிற் துளங்கி
களங்கமற்ற அடியார் கருத்தினில் ஊன்றி
உளம் களித்தே உறைந்தனர் உடுக்கியவளை
-விநாயகரே.

02. சாற்றும் தவநெறிச் சைவம் தழைத்தோங்கி
நாற்றிசையும் பரவி நல்லடியார் வாழ்வுமிக
வீற்றிருந்து அருளும் விடைப்பாகன் வேதங்கள்
போற்றும் இறைவன் உடுக்கியவளை மகாகணபதியே.

03. பொங்கும் அருள்ஒளி பொழிந்து நிறையவே
மங்கும் மருள்நெறி வலிந்து மறையவே
எங்கும் அருள்நிறை சக்தி மகாகணபதியே
இங்கும் தருள்உறை, உடுக்கியவளைப் பதியினிலே.

04. அருவுருவாய் அமர்ந்தருளும் ஆனைமுக லிங்கம்
திருவுருவாய்த் திகழ்ந்திருக்கும் திருஞான லிங்கம்
தருவுருவாய்த் தளிர்ந்திருக்கும் தவமூல லிங்கம்
கருவுருவாய்க் கனிந்தருளும் கணநாத லிங்கமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. சிவத்திரு முருகனும் சீர்மிகு வைரவரும்
பவம்மிகு போக்கப் பரம்சக்தி பக்கத்திலிருக்க
தவத்திரு சாலை உடுக்கியவளைக் கோயிலில்
நவம்மிகு நல்கும் நாயகன் கணபதியே.

06. முக்கண் ஈசன் முன்தெக்கணப்பாய்க் கண்ணகி
சக்கரத்தான் மருகன் அடைக்கலந்தோட்ட முருகன்
தக்க அருள் வீரபத்திரர் காளி தலம் பிட்டியம்
-பதியினோடு
விக்கினம் தீர்த்து உறைவர் உடுக்கியவளைப்
- பிள்ளையாரே.

07. நாற்றிசையும் மணியோசை நயமுடனே ஒலித்திடவே
சாற்றிடவே இறைநாமம் மேனியெல்லாம் சிலிர்த்திடவே
போற்றிசை பாடியே பொன்னடியைச் சரண்புகவே
வீற்றிருந்து அருள்கின்றார் உடுக்கியவளை விநாயகரே.

08. மணியோசை கேட்டவுடன் மங்கலச் சங்கொலியில்
அணிநிரை விளக்கொளியில் அருளுடனே வீற்றிருந்து
தணியாத வினைகளையெல்லாம் தடுகிக்கும்
- கணபதியைப்
பணிவாகப் பக்தர்கள் பரவிடுவார் உடுக்கியவளைப்
- பதியினிலே

09. சீர் ஞானக் குன்றினைத் திருயானைக் கொம்பானை
வேர் கொண்ட வினைகளை வேரறுக்கும் வித்தகனை
கார் ஓங்கும் கருணையைக் களிப்புடனே அருளனை
பார் போற்றும் கணபதியை உடுக்கியவளையிற்
-தொழுகின்றோம்.

10. தெள்ளமுதத் திருப்பாட்டின் தெளியவைக்கும் திருநாமம்
கள்ளமுள்ளோர் நெஞ்சைக் கனியவைக்கும் கணரூபம்
உள்ளமெல்லாம் உருகவைக்கும் உடுக்கியவளைப்
- பதிவாசம்
வெள்ள அன்பு இதயத்தில் வீற்றிருக்கும் விநாயகர்
- பாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. முக்கண்ணிற் சிவமானாய் முழுமுகத்தில்
-விஷ்ணுவானாய்
பக்கஇடத்திற் சக்தியானாய் பவளநாபியிற்
- பிரம்மாவானாய்
தக்கவலத்தில் ஞாயிறுவானாய் தாள்பணிவார்
- உளமுறைபவரானாய்
விக்கினம் தீர்க்கும் விநாயகனுமானாய் விருப்பொடு
- நாளும் தொழுகிறோம்.

12. ஒற்றைக் கொம்புடை உடுக்கியவளை விநாயகனே
பற்றை அறுத்துப் பழவினைகள் போக்கிடுவோனே
இவற்றை முதற்கொண்டு நின்னையே தொழுதிடுவேன்
கொற்றைக் கழலுடையாய் மாவடியிற் கோயிலோனே.

13. மதி நுட்போர் குடிகொண்ட வட்டுக்கோட்டை ஊரிலே
துதி செய்வோர் கூடிடும் உடுக்கியவளைக் கோயிலிலே
கதி என்போர் கருத்தினிற் கருணைபொழி கணபதியே
நிதி அருள்வார் இறைவனையே நித்தலுமே
- இறைஞ்சிடுவோம்

14. அங்குசபாசம் அணிந்தாயே அருங்கனி மோதகம்
-உண்டாயே
தங்கு பேரின்பம் கொண்டாயே தரணியில் அறவாழ்வு
- தந்தாயே
பொங்கும் அறிவொளிச் சுடரோனே போற்றும்வேதப்
- பொருளோனே
ஓங்கும் அருஞ்ஞான உருவேநீ உம்மையே தொழுவேன்
- தினமே இனி.

15. தந்தமுகப் பெருமானே தயவான தத்துவப்
- பொருளோனே
முந்தை வினைகள் தீர்ப்போனே முத்தி இன்பம்
- தருவோனே
சிந்தை குளிர அருள்வோனே சிறப்புடனெம்மைக்
- காப்போனே
எந்தை ஈசனாய் அமைவோனே என்றும்
-உடுக்கியவளைப் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. எண்ணினோம் உம்மை இருத்தினோம் அகத்தில்யாம்
பண்ணினோம் பூசையென்றும் பாடல் வடிவிற்றான்
மண்ணிலே அறமோங்க வரமிகுதாராய்காண்
கண்ணிலே ஒளிதரும் றூளாய்வீதிக் கணபதியே.

17. கதிநீயே கனிநீயே கருத்துநீயே கருணையும் நீயே
மதிநீயே மணிநீயே மணம்நீயே மனமும் நீயே
பதிநீயே பணிநீயே பரிவுநீயே பண்பும் நீயே
விதிநீயே விரிவுநீயே விளைவுநீயே விநாயகரும் நீயே.

18. கொண்டனை ஆனைமுகம் கொழுத்திடும் மனிதஅகம்
விண்டனை தேவர்பாதம் விளக்கிடும் ஞானவேதம்
உண்டனை அங்குசபாசம் உறைந்தனை
-உடுகியவளைவாசம்
கண்டனை அடியார் உள்ளம் கணபதியே தந்தாய்
- வளம்.

19. கலத்தினைக் கவிழ்த்தாய் காவிரியை விடுவித்தாய்
மலத்தினை அவித்தாய் மாஒளியைக் கொடுத்தாய்
பலத்தினைத் தந்தாய் பல்தொண்டு செய்வித்தாய்
நலத்தினை ஈந்தாய் நாம்வணங்கும் விநாயகனே.

20. கும்பத்தில் நினையிருத்திக் குத்துவிளக்கேற்றி மன
விம்பத்தில் உனைஎழுப்பி விநாயகா தொழுதிடுவோம்
துன்பத்தில் உழலுமெம்மைத் தும்பிக்கையாற் தூக்கி
- விட்டாய்
இன்பத்திற் திளைத்து நின்று இணையில்லாப்
- பேறுபெற்றோம்.

21. அடுக்கிய தீபஒளியில் ஆனந்தமாய் எழுந்தருளி
இடுக்கிய இடரெல்லாம் எளிதாகவே நீக்கியருளி
ஒடுக்கிய உள்ளத்தில் ஓங்காரமாய் உறைந்தருளும்
உடுக்கிய வளைப்பதிஇறை "ஓம் மகாகணபதி" தாள்
- சரணடைவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. பஞ்சாலாத்தி ஒளியிற் பரிபூரணனாய்க் காட்சி தந்து
அஞ்சாதே அன்ப ஆனைமுகன் யான்துணையாக
மிஞ்சாது மிகவினைகள் மேதினியில் என்றுணர்த்த
நெஞ்சார நினைநினைந்து நித்தலுமே தொழுகின்றோம்.

23. உடுக்கியவளைக் கணபதியை உள்ளகத்தே நினைந்து
- விட்டால்
அடுக்கியவினை களைந்து அற்புதமாய் அருள்புரிவார்
எடுக்கிய பிள்ளைபோல் ஏகாந்தமாய் நாமிருக்க
இடுக்கிய இடர்களெல்லாம் எளிதாக வேரறுமே.

24. பஞ்சமுக ஆனைமுகன் பாதங்கள் பணிந்திடவே
அஞ்சிடவே ஓடிடும் அவனியில் அவலங்களே
நெஞ்சினையே கோயிலாக்கி விநாயகனே இருத்திடவே
மிஞ்சிடுமோ மிகவினைகள் உடுக்கியவளை
-அடியார்க்கே.

25. திருக்கோயிலில் வந்துவிட்டோம் தினமும்
- நினைந்தேயாம்
திருக்காட்சி கண்டுவிட்டோம் தீமைகள் அற்றோம்யாம்
திருப்பாதம் பற்றிவிட்டோம் திகழ் ஒளியிற்
- திளைத்தோம்யாம்
திருக்கருணை பெற்றுவிட்டோம் திருயானைமுகன்
- அருளில் யாமே.

26. ஓங்கும் அறம்தழைக்க "ஓம் என்னுமொலி என்றும்
- ஒலிக்க
நீங்கு மறம்இழக்க நித்தலுமே அன்பு சிறக்க
வீங்கு அருள்சுரக்க விரும்பி அடியார் துதித்து நிற்க
ஈங்கு திருக்காட்சிதர இறைவன்தாள் சரண்புகுந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. அளிக்கின்றார் அருள்மழையை ஆனைமுகன்
- கார்முகிலாய்
குளிக்கின்றார் பக்தி வெள்ளித்திற் குற்றங்கள்
- களைந்தனராய்
களிக்கின்றார் அடியார்கள் காண்பரிய காட்சி
- கண்டுயர்வாய்
துளிர்க்கின்றார் உள்ளத்திற் தூமணியாம் பாதமதிற்
- தூய்கின்றாரே.

28. ஆடி அடங்கும் அகிலமும் ஆனைமுகன் செயலாற்காண்
ஓடி ஒடுங்கும் மனமும் ஓங்காரன் அருளாற்காண்
மூடி முடங்கும் மூலவினையும் மும்மலமும் நீங்கும் காண்
தேடித் தொடங்கும் ஆனந்த ஒளி தெய்வீகமும் அதுவே
- காண்.

29. கண்டனன் களித்தனன் கருத்தில் ஏற்றிவைத்தனன்
கொண்டனன் கொழித்தனன் கோலமாமுகனைப்
- போற்றினன்
உண்டனன் உவகையுற்றனன் உடுக்கியவளையிற்
- திளைத்தனன்
விண்டனன் வினை நீங்கினன் விநாயகர் அருட்திறனே.

30. ஓம் என்னும் ஒலி உருவே உடுக்கியவளை விநாயகரே
ஓம் என்னும் வரி வடிவே உயர் அடைக்கலந்தோட்டச்
- சகோதரனே
ஓம் என்னும் பரம் பொருளே உத்தம அடியார் உள்ளம்
- உறையே
ஓம் என்னும் மந்திரம் ஓதியே உயர்பிள்ளையார் தாள்
- பணிகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. ஆண்டருள் அழகன் ஆனைமுகனைப் போற்றிடின்
வேண்டருள் செய்திடுவார் வீதிவிளங்கும் பெருமான்
பூண்டருள் அடியார் புனிதன் தாள் பற்றிடவே
தாண்டருள் புரிந்திடுவார் பிறவிப்பெருங்கடல்
- தனையே.

32. உருதனைக் காட்டி உடுக்கியவளைப்பதிக் கோயிலிற்
திருயுனைத் தொழவே திருவருளைத் தந்தாய்
இருவினை அகன்றது இறைஒளி செறிந்தது
குருயெனை ஆண்டது கும்பிட்ட பலன்பேறே.

கணபதி கழல் போற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுக்கோட்டை - மூளாய் வீதி
# உடுக்கியவளை
# மகா கணபதிப்பிள்ளையார்

## இ) "தனிப் பாடல்கள்"

01. ஆலயமணி ஒலிக்கின்றது

ஆலய மணி ஒலிக்கின்றது ஆனைமுகன்நாமம் கேட்கின்றது
சாலவும் சண்முகன் அண்ணனவன் சந்நதி
- உடுக்கியவளையிலே

காலையும் மாலையும் நண்பகலிலும்
கணதீசன் பூசை வேளையிலும்
காற்றினில் வரும் நாதமது
கானமாய் "ஓம்" என்னும்மந்திரமே.
- ஆலயமணி

பாலையும் தேனையும் பழங்களையும்
பருப்புடன் கலந்த மோதகமும்
பாணிக்கரும்பொடு எள்ளையும் படைத்தே
படரும் அறுகம்புல்லாற் பூசைசெய்ய.
- ஆலயமணி

நாளும் அடியார் உடுக்கியவளைப்பதியில்
நாயகனை நன்கு ஆராதித்து
நாவினாற் நற்றமிழ் பாடிநின்று
நல்லவரம் வேண்டித் தொழுதுநிற்க.
- ஆலயமணி

ஆளும் பிள்ளையார் அகமகிழ்ந்து
அன்புடன் அவைற்றை ஏற்றுவர்ந்து
ஆனந்தமாய்க் காட்சி தந்து
அளவில்லா அருளைப் பொழிகின்றார்.
- ஆலயமணி

ஊழும் வினையும் நீங்கிடுமே
உண்மையும் அன்பும் நிலைத்திடுமே
சூழும் உற்றமும் தழைத்திடுமே
சுந்தரக் கணபதி கருணையினால்
- ஆலயமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

02. **நினைத்திடுவாய் நெஞ்சே**

நினைத்திடுவாய் நெஞ்சே நித்தியவாழ்வு பெறவே
அனைத்திலும் அருளுறையும் ஆனைமுகன் தன்னையே

ஓங்காரப் பொருளாளன் "ஓம்" என்னும் உருவாளன்
நீங்காத வரம்தருவான் நீடுபுகழ்வாழ்வு கொடுப்பான்
ஏங்காமல் எண்ணியென்றும் ஏற்றித் தொழுவார்க்கே
தேங்காமல் வேருடன் தீவினையை அழித்திடுமிறையை
- நினைத்திடுவாய்

வட்டுநகர் இறைவனை வளம்தரும் விநாயகனை
இட்டமுடன் இறைஞ்சிடுவாய் இன்னருளைப் பெற்றிடுவாய்
முட்டமிடர் நீக்கியே முன்காக்கும் மூளாய் வீதியரசே
மட்டிலாக் கருணைபொழிவர் மகா கணபதிப்பிள்ளையார்
- தனை
- நினைத்திடுவாய்

விடுத்திடுவாய் ஆசைதனை விரைந்திடுவாய்
- உடுக்கியவளைக்கே
தொடுத்திடுவாய் பாமாலைதனைச் சூட்டிடுவாய்
- பாதந்தனில்
தடுத்திடுவார் துன்பந்தனைத் தாங்கிடுவார் தம்கரத்திற்
கொடுத்திடுவார் காட்சிதனைக் குளித்திடலாம் அருள்
- வெள்ளத்திலே
- நினைத்திடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## 03. உடுக்கியவளைக் கோயிலுக்கு வாருங்கள்

உடுக்கியவளைக் கோயிலுக்கு வாருங்கள்
ஓங்காரப் பிள்ளையாரை வணங்குங்கள்

இடுக்கிய வினைகளைத் தீருங்கள்
இன்ப வெள்ளத்திற் திளையுங்கள்
- உடுக்கியவளை

அடுக்கிய தீபஒளியில் ஆனைமுகன்
அருளுடன் ஆட்சிசெய்யும் ஆலயந்தான்
ஒடுக்கிய மனதினை நிலைப்படுத்தி
"ஓம்" என்னும் மந்திரத்தை உச்சரிக்க
- உடுக்கியவளை

தடுத்திடும் பாவங்களைத் தங்கரத்தாற்
தாங்கிடும் அன்பர் தலைவனவர்
தொடுத்திடும் தமிழாற் பாமாலையினைத்
தொண்டுகள் செய்திட்டு உய்வுறவே.
- உடுக்கியவளை

கொடுத்திடும் உம்மையே அடியவனாய்க்
குற்றங்கள் பஞ்சாய்ப் பறந்திடுமே
விடுத்திடும் மாயவாழ்வு விரைவினிலே
விளங்கிடும் பேரின்பம் விநாயகர்நிலலிலே
- உடுக்கியவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. காட்சிதனைத் தருகின்றார் கணநாதன்

காட்சிதனைத் தருகின்றார் கணநாதன்
கருணைக்கடல் பொங்கும் திருவுருவோடு

ஆட்சிதனைச் செய்கின்றார் உடுக்கியவளையில்
அரும்நாராயணர் ஆரம்பித்த ஆலயந்தனில்
- காட்சிதனை

ஆதி சிவசக்தியுடன் கண்ணகியும் அரும்
- தெக்கணப்பாயினிலே
அன்புடைக் கந்தனும் அடைக்கலந் தோட்டமதிலும்
சோதியுரு வீரபத்திரர் சுந்தர பத்திரகாளி அம்மையோடு
சூழ் வயல் பிட்டியம்பதி புளிநிலலிற் துணையிருக்க
- காட்சிதனை

மணியொடு மங்களஇசை நாற்புறமும் ஒலித்திடவே
மறையோர்கள் வேதஒலி மனம்நிறையப் பரவிடவே
அணிநிரையாய் விளக்குகளில் அருச்சுடர் ஒளிபடர
ஆனந்தமாய் வீற்றிருந்து அருள்பொழியும் பிள்ளையார்
- காட்சிதனை

முப்புரிநூலணிந்த முக்கண்ணன் மும்மதமழி
- அங்குசபாசமொடு
தொப்பையுடை மேனியனே தும்பிக்கையில்
- மோதகத்துடன்
ஒப்பெரும் செந்நிறத்தன் "ஓம்" என்னும் பரம்பொருளாய்
அப்பன் கணபதியே அமர்ந்தருள்கின்றார்
- உடுக்கியவளையிலே
- காட்சிதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. கருணை செய்கின்றார் கணபதியே

கருணை செய்கின்றார் கணபதியே
கணங்களின் பெரும் அதிபதியே
அருமைகொள் தலம் உடுக்கியவளையே
அமர்ந்தருள்கின்றார் சிவசக்தி வைரவருடனே

மாங்கனி பெற்ற ஞானவள்ளல்
மாவடியே விரும்பும் இடமென்றார்
பாங்குடன் அங்கமைத்த கோயிலினிற்
பக்திசெய்யும் அடியார்க்கு அருள்கின்றார்
அங்குசத்தால் ஆவணமதம் அடக்கி
அனைத்து உயிர்களையும் காத்திடுவர்
ஐங்கர மூர்த்தியாய் விளங்கியே
ஐந்தொழில் புரியும் அரனாவார்.

- கருணை

நெஞ்சக் கமலத்தில் நிறைந்திருந்து
நீங்காமல் என்றும் துணைபுரிவர்
வஞ்சப் புலனடக்கி மானிடரை
வட்டூர் இறைவர் வணங்கவைப்பார்
துஞ்சுமன்பர் துயர் பெருகின்
தும்பிக்கையுடன் முன்னே தோன்றிடுவார்
அஞ்சேலென அபயம் தந்தே
அன்புடன் எம்மை அணைத்து நிற்பார்.

- கருணை

கேட்கும் வரங்கலெல்லாம் கிடைத்துவிடும்
கேடுகள் அனைத்தும் அழிந்து போகும்
தேக்கும் மும்மலங்கள் தீக்கருகும்
தெளிந்த அறிவும் தழைத்தோங்கும்
ஊக்கமும் ஆக்கமும் பெருகிவிடும்
உண்மையும் அன்பும் நிலைத்து நிற்கும்
வாக்கும் நல்மனமும் வளர்ந்துயரும்
வல்லபை மகாகணபதி பிள்ளையாராலே

- கருணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06. பிள்ளையார் புகழ் பாடிடுவோம்

பிள்ளையார் புகழ் பாடிடுவோம். பெரும்பேறு பெற்றிடுவோம்
வள்ளலார் வரம்தருவார் வட்டூர் அடியவர் இறைவராவார்

பெட்டகத்தில் இருந்துவிட்ட பெருச்சாளி வாகனார்
இட்ட உள்ளத்தில் அடியாருக்கு இறையுருவைத் தந்தவர்
கொட்டும்பழ மாவடிதான் கோயிற் தலம் என்றுணர்த்தி
அட்ட சித்திதனை வழங்கி ஆண்டிடும் உடுக்கியவளைப்
- பிள்ளையார்

அம்பிகை பாலனவர் அடியார்க்கு அருள்ரூபனவர்
நம்பிடும் நம்மவர்க்கு நல்லருளைப் பொழிந்திடுவர்
கும்பிடவே குணநிறையை குற்றங்கள் களைந்திடுவர்
தும்பிக்கை இறையவரே துணையாய் எம்முடன் இருந்திடுவர்.
- பிள்ளையார்

பாசவினை அகற்றிடுவர் பற்றிய பாவம் அழித்திடுவர்
நேசக்கரம் நீட்டிடுவர் நீடு புகழ் அறவாழ்வு தந்திடுவர்
ஈசன்சக்தி மயமாகிடுவர் இன் அடியார் உளம் உறைந்திடுவர்
பேச என்றும் இனியராகிடுவர் பேரும் அது மகா கணபதிப்
- பிள்ளையாரே
- பிள்ளையார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# 08. துணையாக இருக்கின்றார் தும்பிக்கை இறைவன்

துணையாக இருக்கின்றார் தும்பிக்கை இறைவன்
துயரேதினி மனமே துதித்திடுவாய் அநுதினமே

அணையாத சுடராகும் ஆனைமுகன் உருவமாகும்
அயராமல் அருகிலிருந்து அருள்பொழியும் திருவாகும்
பிணியாக எம்மையிறுக்கும் பீடைகளை எல்லாம்
பிரித்திடும் வைத்தியர் பெயர் பிள்ளையாராகும்
- துணையாக

முடியாத காரியமெல்லாம் முற்றிலும் முடித்துவிடும்
மூசிகவாகனம் ஏறுபவன் முருகேஸ்வரர் சகோதரனாகும்
தடையாகத் தோன்றித் தளர்ந்திடும் ஊக்கமதைத்
தான்முன்னின்று தடுத்திடும் தந்தை தந்தமுகனாகும்.
- துணையாக

உமையாளும் இறைவனவர் உடுக்கியவளை வாசனவர்
உமக்காக அயலினிலே கோயிலுறையும் ஓங்காரர்
இணையாக அவரின்மேல் எங்குமே யாருமில்லர்
இருதாளினைப் பற்றிடுவாய் இறைவாஇன்பம் பெற்றிடலாம்.
- துணையாக

ஓம் கணநாதா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா கும்பம் உள்வீதி வரும் காட்சி



மூலஸ்தான தூபி அபிஷேகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூரண கும்பத்தினால் மூலவருக்கு
அபிஷேகம்.



நல்லை ஆதீன முதல்வர்
அருள் ஆசிஉரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வட்டுக்கோட்டை - மூளாய் வீதி
# உடுக்கியவளை
# மகா கணபதிப்பிள்ளையார் மீது

**திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் பாடிய**

## தனிப்பாடல்
## உடுக்கியவளைப் பிள்ளையார் மகிமை

உடுக்கியவளைப் பிள்ளையார் மகிமை கேண்மின்
உளம் மகிழ்ந்தே அடியார் உள்ளங்களிலே உறைந்தார்

அடுக்கியவளை அணிந்த சித்திபுத்தி கணவன்
நடுக்கிடும்வேளை பகைமுடித்து எம்மைக்காக்கும் அண்ணல்
- உடுக்கியவளை

அன்பர்தம் அன்புக்குள் அகப்படும் ஆனைமுகன்
அப்பம் முப்பழம் மோதகம் அடியார்தர மகிழ்வோன்
அன்பு மலர்சொரிந்து அகம் நெகிழ்ந்தே பாட
அற்புதங்கள் புரிவான் ஆதி கணநாதன்.
- உடுக்கியவளை

பிள்ளையார் கழல் சரணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வட்டுக்கோட்டை - மூளாய் வீதி உடுக்கியவளை மகா கணபதிப்பிள்ளையார்

பிரமஸ்ரீ.நா. சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் அவர்கள் பாடிய

## திருவூஞ்சல்

### காப்பு

01. திருமருவு நாரணனும் ஆரணனும் ஞானந்
திகழ் மருப்பு வாரணனும் தினமும் போற்ற
கரு மருவுஞ் சரவசர வுயிர்கள் தோறுங்
காதலித்தே யருள் சுரக்குங் கந்த னோடும்
மரு வுருவும் உடுக்கைவளைப் பதியில் வாழும்
மதவிகடக் கரிமுகன் மேலூஞ்சலோத
உரு மருவும் பிரணவ நல் வாச நேச
ஒரு மருப்பு வினாயகனார் காப்பதாமே.

### ஊஞ்சல் வண்ணம்

02. சித்திநெறி பவளமதிற் கால்கள் நாட்டி
திகழவரு மரகதமே விட்டம் பூட்டி
பக்திசெறி பொன்னுருவ நாணு மாட்டி
பதுமமணி தன்னிலுயர் பலகை கோட்டி
சித்திரமான மந்தருவின் மாலை சூட்டி
திறமருவு மூஞ்சல்தனில் வாஞ்சை நாட்டி
உத்தமமாம் சரவசராங் காக்க வேட்டு
உடுக்கை வளைப்பதி யுறைவோய் ஆடீருஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சம்பிரம வண்ணம்

03. கருணை செறி முகமசையக் குழைகளாடக்
கனக பனக மணியும் புரிநூலாட
வருணருணத் திருமகுடம் பளீரென் றோங்க
வருமுதர பந்தனமு மாரஞ் சேரத்
தருண மணிக் கிம்புரியும் கவரியாடச்
சண்முகத்துக் குருபரனும் அருகிற் கூட
உருணவிலு குணவசுரனு ரத்தைப் பீறி
உடுக்கைவளைப் பதியுறைவோய் ஆடீரூஞ்சல்.

### கொலு வணக்க வண்ணம்

04. இந்திரனு மரியயனு மடப்பை யேந்த
எழில் நந்தி நமனுடை வாழேந்தி யார்ப்ப
சந்திரனும் சூரியனுங் கவிகை பற்றத்
தகும் வருணன் வாயு மிகும் பனிநீர் வீச
கொந்துவு நறுமலர்க ளீசர் வீசக்
கோதையரும் மாதவரு மூஞ்ச லாட்ட
உந்து மனத் தருண் முனிவர் வேதமோத
உடுக்கை வளைப்பதி யுறைவோய் ஆடீரூஞ்சல்.

### நகர் வணக்க வண்ணம்

05. செங்குவளை மலரலங்கற் திவ்ய வாசஞ்
செறியுசித மதுவருந்திச் செழிப்புண்டாக்கிச்
தூங்கமுறும் வெளியதனிற் தோகைமார்கள்
துய்ய விழி விளையதெனச் சோர்ந்தே வெட்கி
இங்கிதமார் குழலிடையே சேர்ந்து வீழும்
இனிய வனம் வட்டுநகர் இட்டமான
மங்கலஞ்சேர் உடுக்கைவளைப் பதியில் மேவும்
மதவிடங்கக் கரிமுகனே யாடீரூஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடியார் வண்ணம்

06. பல்லு வரிக் கடல்புடை பாரினுள்ளும்
பருமுடம்பு எடுத்து மூன்று பழியே பெற்று
வல்ல தொரு மும்மலமாம் பாசனமும்
வயின் வயினே பிடித்திருப்ப வாழ்வு கூர்ந்து
தொல்லடியார் தமக்கடியே யாகி வாழுந்
தூய்யதொரு தெனதிதயம் பலகையாக்கி
ஒல்லு மண வூஞ்சலின் மேல் வாஞ்சையாகி
உடுக்கை வளைப்பதி யுறைவோய் ஆடீருஞ்சல்

## உற்பவ வண்ணம்

07. கார்மேவுங் கண்ணனவன் கமலத்தண்ணல்
கரியுதைத்த வாசவனுங் கடவுளோருஞ்
சீர்மேவு மருந்தவருங் காணவொண்ணாச்
சிவனிடத்திற் றானுதித்துச் செகத்தோர் போற்ற
ஏர் மேவுங் கரியின் முகத் தவுணன் றன்னை
இரு பிளவினுக்கி யருளிறையோற் போற்றி
ஊர் மேவும் பருதியினு மொளி யுண்டாக்கும்
உடுக்கை வளைப்பதி யுறைவோய் ஆடிருஞ்சல்

## சூர சம்மார வண்ணம்

08. திருமருவும் பரசிவனல் விழியிற் தோன்றிச்
செங்கமலச் சரவணத்திற் சிறுவனாகி
மரு மருவு மாரல்முலைப் பாலுமுண்டு
மன்னு நவ வீரருடன் ஆடல் பூண்டு
கரு மருவுந் தாரகனுஞ் சூரன் சிங்கன்
களமிறப்ப வேல் விடுத்தக் கடவுண்மாதை
உரு மருவு மணம் புணர்ந்த வவ்வியோடும்
உடுக்கை வளைப்பதி யுறைவோய் ஆடீருஞ்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகழ் வண்ணம்

09. சச்சிதானந்த மூர்த்தி யாடீர் ஊஞ்சல்
தகுமுலக நாயகமே யாடீர் ஊஞ்சல்
இச்சை சொலி சின்மயமே யாடீர் ஊஞ்சல்
இங்கிதமார் கணபதியே யாடீர் ஊஞ்சல்
அச்சமய தத்துவமே யாடீர் ஊஞ்சல்
அறுமுகத்துக் குருபரனே யாடீர் ஊஞ்சல்
உச்சிதமார் கரிமுகத்தோய் ஆடீர் ஊஞ்சல்
உடுக்கை வளைப்பதி யுறைவோய்
ஆடீர் ஊஞ்சல்

## வாழி வண்ணம்

10. சீர் செறியு முடுக்கை வளைப் பதியும் வாழி
செறி சமய பேதமொடு வேதம் வாழி
ஏர் செறியு மிபமுகனுங் குகனும் வாழி
இரு பிறப்போர் அரசர் குலம் என்றும் வாழி
கார் செறியும் சீரகத்தார் வணிகர் வாழி
கதி தவ வேளாளர் குலங் கவினும் வாழி
பார் செறியும் கவிதைகளைப் படிப்போர் வாழி
பண்பு பெறக் கேட்பவரும் வாழி வாழி

## எச்சரிக்கை

11. வருந்து மடியார் துயர் தீர்ப்பார் எச்சரிக்கை
திருந்து சிவஞான மருள் தேவே எச்சரிக்கை
கடிமேவிய குழல் வல்லபை கணவா எச்சரிக்கை
அடியார் துயர்கெட வந்தருளரசே எச்சரிக்கை
சிவ சங்கர சுத ஐங்கர செய ஓம் எச்சரிக்கை
பவபந்தனை கெட வந்தருள் பாலா எச்சரிக்கை
வரமுடிக மிசையேறிய வரதா எச்சரிக்கை
சுரபுங்கவ கர அங்குச சுகுணா எச்சரிக்கை
அவல் முப்பழ மிடி சர்க்கரை அயில்வா எச்சரிக்கை
சிவமுற் சுத கரகற்பக தேவே எச்சரிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக்கு

12. திருவார் உடுக்கியவளை வளர்தேவே பராக்கு
குருவாய் வருமுமையாள் சுத கோவே பராக்கு
நதி மேவிய சடையாரருள் நம்பா பராக்கு
மதி மேவிய சடையாமே ரம்பா பராக்கு
கயமாமுகற் கருள் கூர் அறிவுருபா பராக்கு
உயர் மாமறை முதலாய் வருமொருவா பராக்கு
சங்கத் தமிழ் ஔவைக் கருள்தருவே பராக்கு
தூங்கக் கரிமுகனே அரிமுருகா பராக்கு
திருவோடுயர் நெறிதந்தருள் செல்வா பராக்கு
அருவாயரு வுருவாய் வரு குருவே பராக்கு

லாலி

13. உடுக்கைவளைப் பதியதனில் ஒளிர்கின்ற முதல்வா
உண்மை சொல்லிப் பிரணவத்தினன்னு மரன் புதல்வா
- லாலி லாலி

தடக்கரட மதமுடைய தந்தமுக வீரா
தானவர்கள் கிளையழித்த தனித்த மதக்காரா
- லாலி லாலி

மந்திரத்தினோர் உருவாய் வந்த பிரகாசா
வானவர் கணம்பரவும் வல்லவை மண நேசா
- லாலி லாலி

சுந்தர நினைந்துகரத் தந்தி முகத்தோனே
சுகமுலவும் வட்டுநகர் துலங்கு மதத்தோனே
- லாலி லாலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மங்களம்

14. ஓங்கார ரூபனுக்கு ஜெய மங்களம்
உமையாள்தன் பாலனுக்குச் சுப மங்களம்
- ஓங்கார

உலகமெலா மானவர்க்கும்
உணர்வரிய மூலனுக்கும்
அலகில் புகழ் நாயகிக்கும்
அருளாயு றைபவட்கும்
- ஓங்கார

ஐந்து கரத்தையருக்கும்
ஆறுமுகத் தையருக்கும்
சுந்தர நற் பைரவற்கும்
தூயவீர புத்திரற்கும்
- ஓங்கார

**மங்களம்! ஜெயமங்களம்! மங்களம்! சுபமங்களம்**
**மங்களம்! மங்களம்! மங்களம்**

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வட்டுக்கோட்டை - மூளாய் வீதி
# உடுக்கியவளை
# மகா கணபதிப்பிள்ளையார்

முருகேசு சவுந்தரசண்முகநாதன் அவர்கள் பாடிய

## கோயிற் பதிகம்

நீறும் மேனியவன் நிர்மல சக்தி அம்மையுடன்
கூடும் அன்பு ஓங்கக் குணக்குன்றே அவதரித்தாய்
ஆறும் மனம் ஒன்ற ஆனைமுகப் பொலிவுடனே
நாடும் மனித உடலாய் நற்தேவர் பாதம் கொண்டாய்
சீறும் பாவம் அகற்றி சீர்வட்டு நகர் கோயில் சூழ்
சிவ நாமம் ஒலிக்கும் திருத்தல உடுக்கியவளையில்
பேறும் பெற்றடியார் பேர் ஆனந்தமாய்த்தொழும் இறைவா
பெருங்கருணைப் பேராளாய் பேர் ஞான உருவுடையாய்
கூறும் நா உம்நாமம் குலவிளக்கே விநாயகா
கரம் ஐந்துடைக் கணநாதா கஜமுகா என்றே
சாறும் அறுகம்புல் கொண்டே சாலவும் பூசைசெய்தே
சண்முகன் சகோதரனே உன்புகழ் போற்றிடவே
நாறும் வினையகற்றும் நாயகா எம்மைக் காத்து
சேரும் பிணி நீக்கி செகமெல்லாம் அறம் சிறக்க
ஊறும் அருள் புரிவாய் உடுக்கியவளைப் பிள்ளையாரே
உமை நினைத்து உணர்வுடனே உம்தாள்
- சரணடைந்தோமே.



"ஓம் விநாயகா சரணம்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சாய்ராம் பிறிண்டேர்ஸ், சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org